# இலங்கை காப்புறுதி ஒழுங்குப்படுத்தல் ஆணைக்குழு

(காப்பறுதி துறையின் மேற்பார்வையாளர்)

# பொது மக்களுக்கான முக்கிய அறிவித்தல்

## வங்கிகள், நிதி நிறுவனங்கள் மற்றும் நிதி குத்தகை நிறுவனங்கள் ஊடாக நிதியியல் பரிவர்த்தனைகள் மேற்கொண்டு காப்புறுதி பாதுகாப்பு (காப்புறுதி பத்திரங்களை) வாங்குதல்

அ) இலங்கை காப்புறுதி ஒழுங்குப்படுத்தல் ஆணைக்குழுவிற்கு பொது மக்களிடமிருந்து வங்கிகள், நிதி நிறுவனங்கள் மற்றும் நிதி குத்தகை நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு எதிராக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. அது என்ன என்றால் இந்நிறுவனங்கள் தங்களுடன் நிதி பரிவர்த்தனைகளில் ஈடுபடும் வாடிக்கையாளர்களை தங்களால் பரிந்துரைக்கப்படும் காப்புறுதி நிறுவனங்கள், காப்புறுதி தரகர்கள் மற்றும் காப்புறுதி முகவர்கள் மூலம் மட்டுமே காப்புறுதியை பெற்றுக் கொள்ளுமாறு வலியுறுத்துகிறார்கள் என்பதாகும்.

ஆ) தங்களுக்கு விருப்பமான காப்புறுதி கம்பனியில் அல்லது காப்பறுதி தரகரிடம் அல்லது காப்புறுதி முகவரிடம் காப்புறுதியை வாங்கி கொள்வது என்பது தங்கள் உரிமையாகும்.

இ) வங்கிகள், நிதி நிறுவனங்கள் மற்றும் நிதி குத்தகை நிறுவனங்கள் என்பவை காப்புறுதி தொழிலை செய்வதற்கான பதிவினை கொண்டிருக்கவில்லை. ஆகவே அவர்கள் காப்புறுதி பத்திரத்தை விற்கவோ அல்லது குறிப்பிட்ட காப்புறுதி கம்பனி, தரகர் மற்றும் முகவர்களிடமிருந்து காப்புறுதி பத்திரத்தை பெற்றுக்கொள்ள வலியுறுத்துவதோ அனுமதிக்கப் பட்டிருக்கவில்லை என்பதை தெளிவு படுத்துகிறோம்.

ஈ) இத்தகைய காப்புறுதி பத்திரங்களுக்கான தங்களுடைய கட்டுப்பணம் நேரடியாக உரிய காப்புறுதி கம்பனிக்கோ அல்லது காப்புறுதி கம்பனியினால் பரிந்துரைக்கப்பட்ட தரகர் அல்லது காப்புறுதி முகவர் மூலமாகவே செலுத்தப்பட வேண்டும்.

உ) தாங்கள் ஏதேனும் வங்கிகள், நிதி நிறுவனங்கள் மற்றும் நிதி குத்தகை நிறுவனங்களால் பரிந்துரைக்கப்பட்ட காப்புறுதி நிறுவனங்களில் காப்புறுதியை பெற்றுக்கொள்ளுமாறு வலியுறுத்தப் பட்டால், பணிப்பாளர் விசாரணைகள், இலங்கை காப்புறுதி ஒழுங்குப்படுத்தல் ஆணைக்குழுவிற்கு உடனடியாக எழுத்து மூலம் கீழே உள்ள விலாசத்திற்கு தங்கள் முறைப்பாட்டை அனுப்பவும். அல்லது (investigation@ircsl.gov.lk) என்ற ஈ மெயிலிற்கு தங்கள் முறைப்பாட்டை அறியத் தருமாறு பொது மக்கள் இத்தால் கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

**தங்களுக்கு விருப்பமான பதிவு செய்யப்பட்ட காப்புறுதி கம்பனியில் அல்லது காப்புறுதி தரகர்களிடம் அல்லது காப்புறுதி முகவர்களிடம் காப்புறுதி பாதுகாப்பு பெற்றுக் கொள்வது என்பது தங்கள் உரிமையாகும்.**

**இலங்கை காப்புறுதி ஒழுங்குப்படுத்தல் ஆணைக்குழு**

11ம் மாடி, கிழக்கு கோபுரம், உலக வர்த்தக மையம் கொழும்பு 01

தொலைபேசி: 011 2335167 (முறைப்பாடுகள்) / 011 2396184–9

தொலைநகலி : 011 2396190

ஈ மெயில் : info@ircsl.gov.lk இணையத்தளம்: www.ircsl.gov.lk